# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: திரு.ப.இரமேஷ் பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு

2026–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 11–ஆம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.80/2017

CNR No.TNTJ15-000069-2017

ஜார்ஜ் வாதி

/எதிராக/

1. ரகுமான் (இறப்பு)
2. ராபின்சன்
3.செங்கோல்மேரி
4.ஜருகான்
5.அபினேஸ்
6.அபிசேக் பிரதிவாதிகள்

(1ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது சட்ட வாரிசுகளான 3 முதல் 6 பிரதிவாதிகள் இந்நீதிமன்றம் இ.ம.எண்.319/2023–ல் கடந்த 18.07.2023 அன்று பிறப்பித்த உத்தரவின்படி சேர்க்கப்பட்டுள்ளார்கள்)

(இந்நீதிமன்றம் இ.ம.எண்.599/2023–ல் கடந்த 27.02.2024 அன்று பிறப்பித்த உத்தரவின்படி வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

வழக்கறிஞர்கள் முன்னிலை

| | | |
|---|---|---|
| வாதிக்காக | : | திரு.R.M.ராஜ் |
| 2 முதல் 6பிரதிவாதிகளுக்காக | : | திரு.G.சுரேஷ் |



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:44:46 +0530

## தீர்ப்புரை

தாவா சொத்தானது வாதிக்கு சொந்தமானது என விளம்புகை செய்து தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிட கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) திருத்தப்பட்ட வழக்குரை சுருக்கம்:

1.1) தாவா சொத்தானது இந்த வாதியால் கடந்த 28.11.2011–ம் தேதியில் மேற்படி மனையின் உரிமையாளர்களான கோதண்டபாணி மற்றும் கற்பகம் ஆகியோரிடம் கிரையம் பெறப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தினை இந்த வாதியானவர் கிரையம் பேசி பெறுவதற்கு முன்பே அனுபவித்து வந்ததன் அடிப்படையில் மேற்படி கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திற்கு அருகில் இந்த 2–ம் பிரதிவாதிக்கு சொந்தமான ஓட்டு வீடு உள்ளது. இந்த 2–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதியின் சகோதரர் ஆவார்.

1.2) மேற்படி பிரதிவாதிகளின் தம்பி அலெக்ஸான்டர் என்பவருக்கு கடந்த ஆண்டு திருமணம் செய்ய ஏற்பாடு செய்திருந்த நிலையில் மேற்படி திருமணத்திற்காக பந்தல் போடும் போது தாவா சொத்தினை ஆக்கிரமித்து பந்தல் போட்டுள்ளனர். இது குறித்து வாதியானவர் 1–ம் பிரதிவாதியிடம் கேட்டதற்கு, திருமணத்திற்கு போதிய இட வசதி இல்லாத காரணத்தால் தற்காலிகமாக போட்டுள்ளோம் என்றும் திருமணம் முடிந்தவுடன் பிரித்து விடுவோம் என வாதி நம்பும் படி கூறியதால் வெகுளியான இந்த வாதியும் உதவும் மனப்பான்மையில் சம்மதித்துள்ளார்.

1.3) திருமணம் முடிந்து பல நாட்கள் ஆகியும் இந்த பிரதிவாதிகள் பந்தலைப் பிரிக்காமல் ஒரு நாள் இரவோடு இரவாக தாவா சொத்தில் இருந்த



PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:45:32 +0530

பந்தல் அமைப்பினை குடியிருப்பு கொட்டகைப் போல மாற்றம் செய்துள்ளனர். பிரதிவாதிகளின் செயல் குறித்து வாதியானவர் கேட்டதற்கு இந்த பிரதிவாதிகள் தாவா சொத்து தங்களது ஓட்டு வீட்டுடன் சேர்ந்த சொத்து எனவும், தாவா சொத்து தங்களுக்கு சொந்தமான சொத்து என வாதியை மோசடி செய்யும் கெட்ட நோக்கத்திலும், தாவா சொத்தினை அபகரிக்கும் நோக்கத்திலும், தெரிவித்துள்ளனர்.

1.4) மேற்படி பிரதிவாதிகளின் மோசடி செயல் குறித்து இந்த வாதியானவர் கடந்த 14.09.2016–ம் தேதியில் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரினை விசாரணை செய்த போலீஸார் உதவி செய்த வாதிக்கு உபத்திரம் செய்கிறீர்களே என பிரதிவாதிகளை கண்டித்து உடனடியாக கூரையை பிரித்து அப்புறப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியபோது இந்த பிரதிவாதிகள் தங்களுக்கு தெரிந்த சிலரை அழைத்து வந்து காலி செய்ய முடியாது எனவும் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வதாக போலீஸாரை சமாளித்து வந்துள்ளனர். போலீஸாரும் சிவில் பிரச்சனையில் தங்களால் இதற்கு மேல் ஒன்றும் செய்யமுடியாது நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் பெற்றுக் கொள்ளுமாறு இந்த வாதியை அறிவுறுத்தி உள்ளனர். அதன் பிறகு இந்தவாதியானவர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 25.09.2016–ம் தேதியில் இந்த பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளார். மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் எந்தவித பதிலும் கொடுக்க வில்லை.

1.5) தாவா சொத்தினைப் பொறுத்து இந்த பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் பாத்தியமும் கிடையாது. தாவா சொத்தில் இந்த பிரதிவாதிகளால் போடப்பட்டுள்ள கொட்டகையை பிரித்து அப்புறப்படுத்தி காலி மனையாக வாதி வசம் ஒப்படைக்க வேண்டியது இந்த பிரதிவாதிகளின் சட்டப்படியான கடமையாகும். தாவா சொத்து தங்களுக்கு சொந்தமானது



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:45:38 +0530

என இந்த பிரதிவாதிகள் தவறான கட்சியை முன் வைப்பதால் தாவா சொத்தானது இந்த வாதிக்கு சொந்தம் என விளம்புகை செய்ய வேண்டியும், அதனைத் தொடர்ந்து தாவா சொத்தின் சுவாதீனத்தை இந்த பிரதிவாதிகள் வாதி வசம் ஒப்படைவு செய்ய உத்தரவிட கோரியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **எதிர் வழக்குரை சுருக்கம்:**

2.1) வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை நெடுந்தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளின் தந்தை பெயர் தவறு. வழக்குரை பத்திகள் 1, 2, 3-ல் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. வாதி தாவா சொத்தின் உரிமையாளர் எனக்கூறுவது தவறு. பிரதிவாதிகள் பூர்வீகமாக தாவாச் சொத்தில் குடியிருந்து அனுபவம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்து வருவதற்கு 2006, 2007, 2009, 2010, 2010, 2011 க்கு வீட்டு வரி செலுத்தியுள்ளார். வாதி தான் ஓட்டு வீட்டில் குடியிருப்பதாக கூறுவது பொய்.

2.2) வாதியானவர் தாவா சொத்தை கிரையம் பெற்றதாகவும், அதற்கு முன்பே அனுபவித்து வருவதாகவும் கூறுவது பொய். இந்த தாவா சொத்தை 28-11-2011ம் தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் கோதண்டபாணி மற்றும் கற்பகம் ஆகியோரிடம் கிரையம் வாங்கியதாக கூறுவது பொய். மேலும் பிரதிவாதிகள் வாதியிடம் தாவா சொத்தில் வாதியை கேட்டுக் கொண்டு பந்தல் போட்டதாக கூறுவது பொய். அதே பந்தல் அமைப்பினை குடியிருப்பு கொட்டகை போல மாற்றம் செய்துள்ளதாக கூறுவது பொய்.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:45:45 +0530

2.3) வாதி கடந்த 14-9-2016 ல் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் பொய்யான தகவலின் பேரில் புகார் கொடுத்துள்ளதை விசாரணை செய்த போலீசார் நேரில் பார்வையிட்டு விசாரணை செய்து பொய்யான புகாருக்கு நடவடிக்கை எடுக்க மறுத்ததோடு வாதியிடம் இதுபோன்று பொய் புகார் கொடுப்பதை நிறுத்திக் கொள்ளும்படி அறிவுரை கூறி அனுப்பி விட்டார்கள். இந்த உண்மையை மறைத்து வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 4-ல் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானவை. 25-9-2016 தேதியில் வாதியானவர் வழக்கறிஞர் மூலம் தவறான தகவலின் பேரில் அறிவிப்பு அனுப்பியதற்கு பதில் அறிவிப்பு அனுப்ப ஏற்பாடு செய்து கொண்டிருந்த போது வாதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பதில்அறிவிப்புக்கு உரிய தகவலை இந்த எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்.

2.4) வழக்குரை பத்தி 5-ல் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்கு புறம்பானவையாகும். தாவா சொத்தில் பிரதிவாதிகளால் போடப்பட்ட வீடு 2006ம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகள் குடியிருந்து அனுபவம் செய்வதற்கு வீட்டு வரி விதிப்பு செலுத்தியுள்ளார்கள். தாவா சொத்தில் வாதிக்கு எந்தவித உரிமையும், அனுபவமும் கிடையாது. வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குமூலம் கற்பனையானது. வாதிக்கு எந்தப் பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல. இந்த பிரதிவாதிகள்தான் 2006ம் ஆண்டிற்கு முன்பு பூர்வீகமாக அதில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். அதற்கு வீட்டு வரி செலுத்திக் கொண்டு சுதந்திரமாக அனுபவம் செய்து வருவதை மோசடி செய்ய போலியாக வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு போலி ஆவணம் தயாரித்து தவறான தகவலின் பேரில் இந்த பொய் வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியவையாகும்.



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:45:51 +0530

**3) 2, 4, 5, 6 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 3–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட கூடுதல் எதிர்வழக்குரை சுருக்கம்:**

3.1) வாதியின் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல, தள்ளுபடி செய்ய வேண்டியவை ஆகும். இந்த பிரதிவாதிகளில் இறந்த ரகுமான் கடந்த 50 ஆண்டுகளாக தாவா இடத்தில் வீடு கட்டி குடியிருக்கிறார். ரகுமான் தந்தையான ரெத்தினம் இந்த இடத்தில் வீடு கட்டி குடியிருந்தார். அவரின் இறப்பிற்கு பின் ரகுமான் பெயரில் கடந்த 2006–ம் ஆண்டிலிருந்து வீட்டு வரி செலுத்திக் கொண்டு தாவா வீட்டில் குடியிருந்து அனுபவித்து வருகிறார். ரகுமான் இறந்தபின் அவர் வாரிசுதாரர்கள் தொடர்ந்து குடியிருந்து அனுபவித்துவருகிறார்கள்.

3.2) மேற்படி உண்மையை மறைத்து உண்மைக்கு புறம்பான விஷயங்களைக் கொண்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு கிரையம் கொடுத்தவர்களோ, வாதியோ இந்த பிரதிவாதிகள் தாவா இடத்தில் குடியிருப்பதை தடை ஏதும் செய்யவில்லை. இந்த பிரதிவாதிகள் பெயரில் குடியிருப்பு வீட்டிற்கு வரிவிதிப்பு செய்ததையும் தடை செய்யவில்லை. இறந்த 1–ம் பிரதிவாதியின் பெயரில் வீட்டின் வரி விதிப்பு ரசீதுகள் உள்ளது. அதன்படி பிரதிவாதிகள் அனுபவத்தை யாரும் தடை செய்ததாக சொல்வதும் உண்மையல்ல.

3.3) பிரதிவாதி பந்தல் போட்டிருந்ததாகவும், அதை வீடாக மாற்றிவிட்டார் எனவும் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதை பிரதிவாதிகள் மறுப்பதோடு, வழக்கிற்காக வாதியானவர் கற்பனையாக ஜோடித்த விஷயம் ஆகும். இறந்த 1ம் பிரதிவாதியின் தந்தை ரெத்தினம் உயிருடன் இருந்த போதே தாவா இடத்தில் வீடு இருந்தது. அதில் குடியிருந்து அனுபவித்து வந்த ரெத்தினம் இறந்த பின் 2006–ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதி



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:45:57 +0530

பெயரில் வீட்டிற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டு ரசீது உள்ளது. இந்த உண்மையை மறைத்து கற்பனையாக வாதி கூற்றை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்.

3.4) பிரதிவாதிகள் இரவோடு இரவாக தாவா சொத்தில் இருந்த பந்தலை பிரிக்காமல் குடியிருப்பு கொட்டகை போல மாற்றம் செய்துள்ளனர் என்று கூறியிருப்பதை பிரதிவாதிகள் ஒப்புக் கொள்ளவில்லை. அது உண்மையல்ல. வாதியே அதை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். வழக்குரை பாரா 3–ல் உள்ள விஷயங்கள் அனைத்தும் தவறானது, உண்மைக்கு புறம்பானவை ஆகும். இதை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. வாதி இதை நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.5) வழக்குரை பாரா 4–ல் உள்ள விஷயங்களையும் பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்த வாதி உண்மைக்கு புறம்பான தவறான சங்கதிகளை புகாராக திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார். அதை விசாரித்த காவல்துறை அதிகாரி வாதியை கண்டித்ததோடு இந்த உண்மைக்கு புறம்பான புகார் குடியிருப்பு வீடு சம்பந்தமாக சிவில் பிரச்சனை இதை நடவடிக்கை ஏதும் எடுக்க இயலாது என வாதியை கண்டித்து அனுப்பி விட்டதை கற்பனையாக தவறான விஷயங்களை வழக்குரை பாரா 4–ல் வாதி குறிப்பிட்டுள்ளதை இந்த பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். இதையும் இந்த வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.6) வழக்குரை 5–வது பாராவில் சொல்லியுள்ள விஷயங்களையும் இந்த பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். இந்த பிரதிவாதிகள் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேல் தாவா சொத்தில் குடியிருந்து அனுபவிக்கிறார்கள். அதற்கு ஆதரவாக பிரதிவாதியின் பெயரில் குடியிருப்பு அனுபோக


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:04 +0530

உரிமையும் உள்ளது. அதற்கு ஆதரவாக கடந்த 2006–ம் ஆண்டிலிருந்து குடியிருப்பு வீட்டிற்கு 1ம் பிரதிவாதி பெயரில் வரிவிதிப்பு கட்டணம் செலுத்தியதற்கு வீட்டு வரி ரசீதுகள் உள்ளது. இந்த பிரதிவாதிகள் 50 ஆண்டுகளாக தாவா இடத்தில் குடியிருப்பதற்கு அனுபோக உரிமை உள்ளது. இந்த உண்மையை தெரிந்தும் வாதி தாக்கல் செய்த வழக்குரை பாரா 5–ல் உள்ள விஷயங்களை பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். அதை வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.7) வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் கற்பனையானது வாதி உண்மைக்கு புறம்பான விஷயங்களைக் கொண்டு வழக்குரை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் உள்ள வீட்டில் பிரதிவாதிகள் மூன்று தலைமுறையாக 50 ஆண்டுகளாக குடியிருந்து அனுபவித்து வருவதால் பிரதிவாதிகளுக்கு எதிரிடை அனுபவ பாத்தியம் சித்தித்து விட்டபடியால் வாதிக்கு வழக்குரையில் குறிப்பிட்டுள்ள எந்த பரிகாரமும் வாதிக்கு கிடைக்க கூடியதல்ல. ஆகையால் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது ஆகும்.

4) வாதுரைகள் பார்வையிடப்பட்டு கீழ்கண்ட எழு வினாக்கள் வனையப்பட்டுள்ளது.

**எழு வினாக்கள்**:

1. Whether the plaintiff is entitled to the relief of declaration as prayed for?
2. Whether the plaintiff is entitled to the relief of recovery of possession as prayed for?
3. To what other relief the plaintiff is entitled to?



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:10 +0530

5) **சாட்சியங்கள்:**

5.1) வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3ஆம் நபர்களான திரு.ஆரோக்கியதாஸ், திரு.பாரதிராஜா, திரு.சுந்தரவடிவேல் ஆகியோர் வாதிக்கு ஆதரவாக வா.சா.2 முதல் வா.சா.4 வரை சாட்சி வாக்குமூலம் தாக்கல் செய்து விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

5.2) இவ்வழக்கில் 3–ம் பிரதிவாதியான திருமதி.செங்கோல்மேரி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிற்கு 3ம் நபரும் 2–ம் பிரதிவாதியின் தாயாருமான திருமதி.புஷ்பம் என்பவர் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அதேபோல் வழக்கில் 3–ம் நபரும் 2–ம் பிரதிவாதியின் மாமனாருமான திரு.ரெத்தினம் என்பவர் பி.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

6) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு சாட்சியங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

7) **எழு வினாக்கள் 1, 2 மற்றும் 3:**

7.1) தாவா சொத்து என்பது கூத்தூர் கிராமம் நத்தம் சர்வே எண்.145/3B–ல் உள்ள 792 சதுரடி காலி மனை ஆகும். நத்தம் மனைவரி பட்டாப்படி இதன் புதிய சர்வே எண்.155/11 ஆகும். மேற்படி தாவா சொத்தை வாதி கடந்த 28.11.2011 அன்று கோதண்டபாணி மற்றும் கற்பகம் ஆகியோரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளதாகவும், 2–ஆம் பிரதிவாதிக்கு சொந்தமான ஓட்டுவீடு தாவா சொத்திற்கு அருகில் உள்ளதாகவும், 1, 2


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:16 +0530

பிரதிவாதிகளின் சகோதரர் அலெக்சாண்டர் என்பவருக்கு திருமணம் செய்த போது இடவசதி பற்றாக்குறையால் பந்தல் அமைக்க இடம் கொடுத்ததாகவும் திருமணம் முடிந்த பின்னர் அந்தப் பந்தலை அப்புறப்படுத்தாமல் அதைக் கூரையாக மாற்றி வீடு கட்டி தாவா சொத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து விட்டதாகவும், எனவே தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்து அதன் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிட கோரியும் வழக்குரைக்கப்பட்டுள்ளது.

7.2) தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரும் வாதி தாவா சொத்தின் மீது தனக்குள்ள உரிமை மூலத்தை தகுந்த சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும். அதன்படி தாவா சொத்தை வாதியானவர் சிவகடாச்சம் குமாரர் கோதண்டபாணி மற்றும் ராஜவேல் மனைவி கற்பகம் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்று திருக்காட்டுப்பள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.895/2011–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதை வா.சா.ஆ1 (கிரையம் ஆவணம்) மூலம் வாதி நிரூபணம் செய்துள்ளார்.

7.3) பிரதிவாதிகளை பொருத்தவரை தாவா சொத்து ரத்தினம் மற்றும் புஷ்பம் ஆகியோர் அனுபவித்து வந்து அதில் வீடு கட்டி மின் இணைப்பு பெற்று, வீட்டு வரி ரசீது செலுத்தி அனுபோகம் செய்து வருவதாகவும், பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்தில் வாதிக்கு பாத்தியம் இல்லை என்றும், உண்மைகளை மறைத்து பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

7.4) பி.சா.1 (3–ஆம் பிரதிவாதி) குறுக்கு விசாரணையில் "**என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 சிட்டாவில் வாதிக்கு தாவா சொத்தை கிரையம்**



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:21 +0530

**செய்து கொடுத்த தண்டபாணி, கற்பகம் பெயரும், வாதி ஜார்ஜ் பெயரும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது பெயரோ, எனது கணவர் ரகுமான் பெயரோ, கொழுந்தனார் ராபின்சன் பெயரோ இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 இருப்பிட சான்றில் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிக்கு விற்பனை செய்த கோதண்டபாணி, கற்பகம் எங்கு இருக்கிறார்கள் என்றால் கோதண்டபாணி இறந்து விட்டார் கற்பகம் திருப்பூரில் வசிக்கிறார். பி.சா.ஆ.5 அ–பதிவேட்டில் உரிமையாளர் என சைவராசு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது அவர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.**" என்று சாட்சி அளித்துள்ளார்.

7.5) பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான உரிமை மூல ஆவணங்களாக இல்லை. மேலும் வருவாய்த் துறையினர் வழங்கும் "பட்டா" மட்டுமே உரிமை மூல ஆவணமாக எடுத்துக் கொள்ள முடியாது. (*Patta is not a Document for Title*). வாதியானவர் தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என்பதை உரிமை மூல ஆவணமான கிரைய ஆவணம் (வா.சா.ஆ.1) மூலம் நிரூபணம் செய்துள்ளார்.

7.6) மேலும் வாதி சார்பில் கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.3–ஐ 1–ஆம் பிரதிவாதி பெற்றுக்கொண்டது வா.சா.ஆ.4 மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1–ஆம் பிரதிவாதி மேற்படி அறிவிப்பில் கண்ட சங்கதிகளை மறுத்து ஏன் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை? என்ற வினா எழுகிறது. மேற்படி வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் கூறப்பட்டுள்ள சங்கதிகளில் மறுப்பதற்கு எதுவும் இல்லை என்பதால்தான் பதிலறிவிப்பு


PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:28 +0530

கொடுக்கப்படவில்லை என்று அனுமானம் கொள்ளப்படுகிறது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பின் அடிப்படையில் தான் இந்த வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழலில் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் வாதியின் வசம் ஒப்படைக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றும் தீர்வு காண்கிறேன்.

8) **இறுதியாக தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்தும், தாவா சொத்தின் காலி சுவாதீனத்தை பிரதிவாதிகள் 2 மாதங்களுக்குள் வாதி வசம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டும், வழக்கு செலவு தொகையுடன் வாதியின் வழக்கினை அனுமதித்து தீர்ப்பளிக்கிறேன்.**

இத்தீர்ப்புரை என்னால் வாய்மொழியாக சொல்லப்பட்டு கூகுள் டாக்ஸ் உதவியுடன் வரிவடிவம் கொடுக்கப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (11.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANCHANATHAN RAMESH Digitally signed by PANCHANATHAN RAMESH Date: 2026.06.11 05:46:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி திருவையாறு.

1. வாதித்தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.1 | திரு.ஜார்ஜ் |
| 2 | வா.சா.2 | திரு.ஆரோக்கியதாஸ் |
| 3 | வா.சா.3 | திரு.பாரதிராஜா |
| 4 | வா.சா.4 | திரு.சுந்தரவடிவேல் |

2. வாதி தரப்பு சான்றாணங்கள்:

| | | |
|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | 28.11.2011 தேதியிட்ட கிரைய பத்திரம் அசல். |
| 2 | வா.சா.ஆ.2 | 14.09.2019 தேதியிட்ட புகார் நகல். |
| 3 | வா.சா.ஆ.3 | 25.09.2016 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலவலக நகல். |
| 4 | வா.சா.ஆ.4 | 26.09.2016 நாளிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை. |

3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்

| | | |
|---|---|---|
| 1 | பி.சா.1 | திருமதி.செங்கோல்மேரி |
| 2 | பி.சா.2 | திருமதி.புஷ்பம் |
| 3 | பி.சா.3 | திரு.ரெத்தினம் |

4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| | | |
|---|---|---|
| 1 | பி.சா.ஆ.1 | கூத்தூர் கிராம நிர்வாக அலவலர் புல எண்.155/11–க்கு வழங்கிய நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டா உண்மை நகல். |
| 2 | பி.சா.ஆ.2 | கூத்தூர் கிராம நிர்வாக அலவலர் புல எண்.155/11–க்கு வழங்கிய நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு உண்மை நகல். |
| 3 | பி.சா.ஆ.3 | திருவையாறு வட்டாட்சியர் 13.12.2011 நாளிட்டு வழங்கிய இருப்பிட சான்று |
| 4 | பி.சா.ஆ.4 | கூத்தூர் கிராமம் புல எண்.155/11–க்குரிய கணினி பட்டா. |
| 5 | பி.சா.ஆ.5 | கூத்தூர் கிராமம் புல எண்.155/3பி–க்குரிய அ–பதிவேடு இணையதள பதிவிறக்க நகல். |



PANCHANATHAN RAMESH
Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:42 +0530

| | | |
|---|---|---|
| 6 | பி.சா.ஆ.6 | ரகுமான் பெயரிலுள்ள வீட்டு வரிரசீதுகள் அசல்–3 |
| 7 | பி.சா.ஆ.7 | ரகுமான் பெயரிலுள்ள (2005–2009) குடும்ப அட்டை அசல். |
| 8 | பி.சா.ஆ.8 | ரகுமான் பெயரிலுள்ள மின் கட்டண அட்டை அசல். |
| 9 | பி.சா.ஆ.9 | தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) 19.12.2025 நாளிட்டு வழங்கிய மேலெழுத்து அசல். |

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.11 05:46:47 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு.